ஓம்
சிவமயம்

மலேசிய அருள்நெறித் திருக்கூட்டம்
கோலாலும்பூர்

தலைவர் : 012-363 3446
செயலாளர்: 019-359 3860

அருள்நெறி நிலையம் 17, ஜாலான் செக்கோர், ஆஃப் ஜாலான் ஹலிமாத்தோன்,
3வது மைல் ஜாலான் கிள்ளான் லாமா, 58000 கோலாலும்பூர்

சைவப் பெரியார் கா. இராமநாதன் பி. ஏ., பி. எல் அவர்களின் நினைவு நாள்
"பெரிய புராண விழா - மாணவர்கள் சமயப் போட்டிகள் 2027"
சனிக்கிழமை 26-12-2026

பெருமையால் தம்மை ஒப்பார்; பேணலால் எம்மைப் பெற்றார்;
ஒருமையால் உலகை வெல்வார்; ஊனமேல் ஒன்றும் இல்லார்;
அருமையாம் நிலையில் நின்றார். அன்பினால் இன்பம் ஆர்வார்;
இருமையும் கடந்து நின்றார். இவரை நீ அடைவாய் என்று.

தொல்லைமால் வரை பயந்த தூயாள் தன் திருப்பாகர்
அல்லல் தீர்ந்து உலகு உய்ய மறையளித்த திருவாக்கால்
'தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்' என்று
எல்லையில் வண்புகழாரை எடுத்து இசைப் பா மொழி என்றார்.

- பெரிய புராணம், திருமலைச்சருக்கம் - 5.
தடுத்தாட்கொண்ட புராணம், செய்யுள்கள் 196 & 199

அருள்நெறி அன்பர்களே, வணக்கம்.

மலேசியா அருள்நெறித் திருக்கூட்டம், சைவப் பெரியார் அமரர் கா. இராமநாதன் பி.ஏ.பி.எல். அவர்களின் நினைவாகப் பெரிய புராண விழாவினை ஆண்டுதோறும் பல நிகழ்வுகளுடன் சிறப்பான முறையில் நடத்தி வருகிறது.

இவ்வாண்டும் தமிழ் உணர்வோடு, சைவ சமயத்தையும் நமது சமுதாயத்தின் ஒழுக்கத்தையும் பேணும் நோக்கத்தில் இளம்பாலர், தொடக்க, இடைநிலை, உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு மனனப் போட்டி, பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, சமயப்புதிர்ப் போட்டி ஆகிய நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் பிரிவுகளின்படி நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

போட்டிகள் யாவும் அருள்நெறி நிலையத்தில் 26.12.2026 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணி முதல் நடைபெறும்.

போட்டிப் பிரிவுகள்

பிரிவு 1 - **6 வயதும் அதற்குக் கீழ்ப்பட்டவர்களும்**
பிரிவு 2 - **7 வயது முதல் 9 வயது வரை**
பிரிவு 3 - **10 வயது முதல் 12 வயது வரை**
பிரிவு 4 - **13 வயது முதல் 16 வயது வரை**
பிரிவு 5 - **17 வயது முதல் 21 வயது வரை**

மனனப் போட்டி

பிரிவு 1. கீழ்க்காணும் (அ, ஆ) இரண்டும் சொல்ல வேண்டும்.

அ) ஆத்திசூடி - எண் 90 (மிகைபடச் சொல்லேல்) முதல் 99 (வல்லமை பேசேல்) வரை
ஆ) உலகநீதி பாடல் - எண் 11 (அஞ்சுபேர் கூலியைக் கைக்கொள்ள வேண்டாம்)

மனனப் போட்டி

பிரிவு 2. கீழ்க்காணும் இரு பகுதிகளும் :

அ) கொன்றை வேந்தன் - தோழனோடு (46) முதல் நோன்பு என்பது (56)
ஆ) திருக்குறள் - (அதிகாரம் 53) சுற்றம் தழால் அல்லது
(அதிகாரம் 19) புறங்கூறாமை

பிரிவு 3. கீழ்க்காணும் இரு பகுதிகளும் :

அ) திருக்குறள் - (அதிகாரம் 65) சொல்வன்மை அல்லது
(அதிகாரம் 81) பழமை
ஆ) நல்வழிப் பாடல்கள் இரண்டும் - (பாடல் 35) பூவாதே காய்க்கு .....
(பாடல் 37) வினைபயனை வெல்வதற்கு.....

பிரிவு 4. கீழ்க்காணும் இரு பகுதிகளும் :

அ) திருக்குறள் - (அதிகாரம் 88) பகைத்திறம் தெரிதல் அல்லது
(அதிகாரம் 108) கயமை
ஆ) மூதுரைப் பாடல்கள் இரண்டும் - (பாடல் 13) சுவையாகிக் கொம்பாகிக்.....
(பாடல் 14) கான மயிலாடக்.....

பிரிவு 5. கீழ்க்காணும் பகுதி :

திருவருட்பயன் 1 - பதி முதுநிலை

பேச்சுப் போட்டி

கீழ்க்காண்பவற்றுள் ஏதேனும் ஒரு தலைப்பில் பேசவேண்டும் :

பிரிவு 2	அ) திருஞானசம்பந்தர்	ஆ) திருநீலகண்ட நாயனார்	(5 நிமிடங்கள்)
பிரிவு 3	அ) திருமூல நாயனார்	ஆ) கோட்செங்கட் சோழ நாயனார்	(6 நிமிடங்கள்
பிரிவு 4	அ) நமிநந்தியடிகள்	ஆ) மாணிக்கவாசகர்	(7 நிமிடங்கள்)
பிரிவு 5	அ) திருநீற்றின் பெருமை	ஆ) திருப்பல்லாண்டு	(10 நிமிடங்கள்)

கட்டுரைப் போட்டி

பிரிவு 2	திருநாவுக்கரசர்	(30 நிமிடங்கள்)
பிரிவு 3	சேரமான் பெருமான்	(35 நிமிடங்கள்)
பிரிவு 4	திருவாசகம் என்னும் தேன்	(40 நிமிடங்கள்)
பிரிவு 5	திருவைந்தெழுத்து	(60 நிமிடங்கள்)

சமயப் புதிர்ப் போட்டி (பெரிய புராண அடிப்படையில்)

பிரிவு 2 - 7 வயது முதல் 9 வயது வரை
பிரிவு 3 - 10 வயது முதல் 12 வயது வரை
பிரிவு 4 - 13 வயது முதல் 17 வயது வரை

மேல் விவரத் தொடர்புக்கு

முனைவர் திலகவதி (துணைத் தலைவர்) தொ. பேசி எண் : +6019 - 264 0542
சிவத்திரு ச. மனோகரன் (செயலாளர்) தொ. பேசி எண் : +6019 - 359 3860
திருமதி மோகன சுந்தரி (நூலக பொறுப்பாளர்) தொ. பேசி எண்: +6012 - 304 1471

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

இக்கண்,
டத்தோ டாக்டர் வ. கதிரேசன்
தலைவர்

Printed by : **NTP Print Station** Contact : +6012-2130672 Email : ntpprint224@gmail.com,